DIOCESE OF KUMBAKONAM

NEWS - LETTER

(Compiled and Edited by Diocesan News-Letter Committee)

VOL. : 52 JULY - 2025 No. 07



செயற்கை நுண்ணறிவு வளர்ச்சி என்பது மனித மாண்பிற்கு மதிப்பளிப்பதாகும், மானுட பொதுநலனுக்கு வழிவகுப்பதாகவும் அமைதல் அவசியம்.

– திருத்தந்தை பிரான்சிஸ்

ஆயரின் செய்தி
செயற்கை நுண்ணறிவு - Artificial Intelligence AI

அன்பார்ந்த சகோதரிகளே, சகோதரர்களே!

செயற்கை நுண்ணறிவு, இன்று கற்றல், தகவல் உலகில் ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது பொதுவாக மனித நுண்ணறிவு தேவைப்படும் பணிகளை செய்யக்கூடியது. கற்றல், பகுத்தறிதல், சிக்கலைத் தீர்த்தல், இயற்கை மொழியை புரிந்துகொள்வது மற்றும் புதிய தகவலை மாற்றியமைத்தல் ஆகியவையும் இதில் அடங்கும். இன்று AI பற்றி பேசுவது அதிநவீனத்தின் அடையாளமாக மாறிவிட்டது. செயற்கை நுண்ணறிவே இப்போது மனித மூளை செய்யவேண்டிய பல செயல்களைச் செய்வதால் மனிதனின் பல திறமைகள் காலப்போக்கில் குறைந்துவிடும் என பலர் எச்சரிக்கின்றனர். ஒரு விடுமுறை கடிதம் எழுத வேண்டுமானால் கூட AI-யிடம் "இன்றைக்கு என் பாட்டி இறந்து விட்டதாக ஒருநாள் விடுமுறை கடிதம் எழுது" என்று சொல்ல ஆரம்பித்துவிட்டோம்.

மனிதர்கள் ஆற்றி வரும் பணி அனைத்தையும் செயற்கை நுண்ணறிவால் செய்து விட முடியாது என்பதே எதார்த்தம். மனிதர்களைப் போல் சூழ்நிலைக்கு தகுந்தவாறு பணியின் போக்கை மாற்றிக்கொள்ளும் தன்மை எந்த ரோபோட்டுக்கும் கிடையாது. நாம் எதனை பயிற்றுவிக்கிறோமோ அதனை மட்டுமே ரோபோட் செயல்படுத்திக்காட்டும், என்றாலும் வரும் காலத்தில் AI தொழில்நுட்பம் தொழில்துறை, வணிகம், பாதுகாப்பு, இராணுவம், போர், மருத்துவம் மற்றும் தனிமனித வாழ்வில் ஏற்படுத்தப்போகும் தாக்கம் கற்பனைக்கு அப்பாற்பட்டதாகவே இருக்கும். 50 வருடங்களுக்கு முன்பு கணினி தான் உலகத்தை ஆட்டுவிக்கப்போகிறது என்று கூறியிருந்தால் யாரும் நம்பியிருக்கமாட்டோம். அதுபோன்ற நிலைதான் இன்று AI தொழில்நுட்பத்திலும் உள்ளது. கடவுளை போலவே AI எல்லா இடங்களிலும் ஏகோபித்து, தனது அசுரத்தனமான ஆக்டோபஸ் கரங்களை விரிக்கின்றபோது மனித வாழ்வே கேள்விக்குரியதாக மாறி விடுமோ என்பது தவிர்க்கமுடியாத ஐயமாகவே உள்ளது.

2065-ல் செயற்கை நுண்ணறிவு எங்கும் நீக்கமற நிறைந்து இருக்கும்போது இந்த சமூகம் எப்படி இருக்கும் என்று சொல்ல

முடியாது. ஓட்டுநர்கள், கதிரியக்க பணியாளர்கள், காப்பீடு செய்து கொடுக்கும் பணியாளர்கள் வேலையை ரோபோட் பறித்துவிடும்; நீதிமன்றத்தில் வழக்காட செயற்கை நுண்ணறிவின் ஆல்பா -4 வழக்குரைஞர்கள் துணைப்புரிவார்கள்; நமக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையைத் தேர்வு செய்ய செயற்கை நுண்ணறிவு உதவி புரியும்; நமக்கு பிடித்த எழுத்தாளர்கள், கலைஞர்கள், தலைவர்களுடன் நாம் விரும்பும் நேரத்தில் உரையாடலாம்; அரசாங்கத்தின் ஆட்சியாளர்களை தேர்ந்தெடுப்பதில் செயற்கை நுண்ணறிவு முக்கிய பங்கு வகிக்கும்; காவலர்களுக்கு திருடர்களை பிடித்து தருவதில் பெரும் உதவிபுரியும்; நம் நோய்களை கண்டறிந்து அவற்றிற்கான தீர்வையும் பரிந்துரைக்கும; சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைக்கு செயற்கை நுண்ணறிவு ஒரு சூப்பர் **ஹீரோ** போன்றது. காட்சிப்படுத்துதலில் தத்துருவத்தின் உச்சத்திற்கே சென்றுவிடுகிறது. இவையெல்லாம் பொதுவெளியில் நடக்கும்போது நிச்சயமாக தனிமனித தகவல்களும் பொது வெளியில் பகிரப்பட்டு இருக்கும், தனிமனித இரகசியம் (Privacy) என்பது இருக்காது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

2022-ல் Chat GPT வெளியிடப்பட்டது செயற்கை நுண்ணறிவின் ஒரு மைல்கல்லாக கருதப்படுகிறது. நாம் அதை கேள்விகள் கேட்கலாம். தகவல் கோரலாம், படைப்பாற்றலுக்கும் பயன்படுத்தலாம், ஆராய்ச்சியில் உதவுவது முதல் ஆக்கப்பூர்வமான திட்டங்களுக்கு உதவுவது வரை பல்வேறு பணிகளுக்கு இந்த செயற்கை நுண்ணறிவு மதிப்பு மிக்கவை. மனித மூளையையே மிஞ்சும் நுண்ணறிவாகவே பார்க்கப்படுகிறது.

இப்படி மனித வாழ்வில் ஆதிக்கம் செலுத்தும் செயற்கை நுண்ணறிவு மருத்துவம், விவசாயம், கல்வி, உற்பத்திதுறை, சில்லரை வணிகம், போக்குவரத்து போன்ற பல்வேறு துறைகளில் பயன்பாட்டிற்கு வர இருக்கிறது. விஞ்ஞானி **ஸ்டீபன் ஹாக்கிங்** சொன்னது போல் "மனிதர்கள் கண்டுபிடித்த செயற்கை நுண்ணறிவு மனித குலத்துக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்து வருகிறது. ஆனால் அதே நேரத்தில், ரோபோட்டுக்கு நாம் எல்லாவற்றையும் கற்றுக்கொடுத்துவிட்டால் அவை நம்மைவிட புத்திசாலியாகிவிடும் எச்சரிக்கை" என்று கூறியிருப்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

AI நன்மைகள்:

1. **மனிதப் பிழை குறைப்பு** - கணினிகள் சரியாக திட்டமிடப்பட்டிருந்தால் மனிதர்களைப் போல் தவறு செய்யாது.

2. **ஆபத்துக்களை தடுக்கிறது** - செவ்வாய் கிரகத்துக்கு செல்வது, வெடிகுண்டை செயலிழக்கச் செய்வது, பெருங்கடல் ஆழமான பகுதிகளில் ஆராய்வது, நிலக்கரி,எண்ணெய் சுரங்கள் போன்றவற்றில் பயன்படுகின்றது.

3. **24 × 7 கிடைக்கும்** - மனிதர்கள் வேலை பளுவால் களைத்தாலும் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தி இயந்திரங்களை இடைவெளி இல்லாமல் 24 x 7 வேலை செய்ய வைக்க முடியும்.

4. **மீண்டும் மீண்டும் வேலை** - மனிதன் ஒரே வேலையை செய்து சளிப்பு களைப்பு அடைவதுபோல் அல்லாமல் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி சாதாரணமான பணிகளை நாம் உற்பத்தித் திறனுடன் ஆக்கப்பூர்வமாக செய்து முடிக்கலாம்.

5. **டிஜிட்டல் உதவி** - டிஜிட்டல் அசிஸ்டண்ட் பல இணையதளங்களில் பயனர் விரும்பும் விஷயங்களை வழங்க பயன்படுத்தப்படுகிறது. இதனால் இயந்திரத்துடன் அரட்டை அடிக்கிறோமா அல்லது மனிதர்களுடன் அரட்டை அடிக்கிறோமா என்பதை தீர்மானிப்பது கடினமாக இருக்கும்.

6. **விரைவான முடிவுகள்** - செயற்கை நுண்ணறிவை பயன்படுத்துவதன் மூலம் இயந்திரங்களை மனிதர்களைவிட வேகமாக முடிவுகளை எடுக்கவும், செயல்களை விரைவாக செய்யவும்முடியும்.

7. **தினசரி விண்ணப்பங்கள்** - போக்குவரத்து, இருப்பிடங்களை தேடுவதற்கும், செல்பி எடுப்பதற்கும், Phone call செய்வதற்கும், Mail - க்கு பதில் அனுப்பவும் இன்னும் பலவற்றிற்கு பயன்படுகிறது.

8. **புதிய கண்டுபிடிப்புகள்** - மருத்துவத்தில் மேம்பட்ட செயற்கை நுண்ணறிவு மூலம் புதிய கண்டுபிடிப்புகள் மூலம் சிக்கலான பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியும்.

AI தீமைகள்:

1. **உருவாக்கத்திற்கான அதிக செலவு** - வன்பொருள் மற்றும் மென்பொருள் பழுது மற்றும் பராமரிப்பு என நிறைய செலவுகள்

தேவைப்படுகிறது. சிக்கலான இயந்திரம் என்பதால் உருவாக்குவதற்கு பெரும் செலவு தேவை.

2. **மனிதர்களை சோம்பேறிகளாக்குதல** :- வேலைகளை தானியங்கு படுத்துவதன் மூலம் மனிதர்களை சோம்பேறியாக்குகிறது.

3. **வேலையின்மை** - பெரும்பான்மையான பணிகளையும் மற்ற வேலைகளையும் செய்வதால் மனிதர்களின் வேலைவாய்ப்பில் சிக்கல்களை ஏற்படுத்துகிறது.

4. **உணர்ச்சிகள் இல்லை** - செயற்கை நுண்ணறிவு குழு நிர்வாகத்துக்கு ஒத்துவராது. ஏனெனில் இயந்திரங்கள் மனிதர்களுடன் ஒரு பிணைப்பை உருவாக்க முடியாது.

5. **வரையறுக்கப்பட்ட செயல்பாடு** - இயந்திரங்கள் தாங்கள் வடிவமைக்கப்பட்ட அல்லது செய்ய திட்டமிடப்பட்ட பணிகளை மட்டுமே செய்யக்கூடியவை. செயற்கை நுண்ணறிவால் மனித அறிவுக்கு எட்டாத செயல்பாடுகளைகூடச் செய்யவைக்க முடியும் என்பது நிரூபிக்கப்பட்டு வருவது உண்மை தான். ஆனால், மனித மூளைக்கே உரித்தான அனுதாப உணர்வு (Empathy), கருணை, அனுபவங்கள் மூலம் கற்றுக்கொண்டதை வைத்து சூழ்நிலைகளை அணுகும் சமயோசித புத்தி போன்றவற்றை செயற்கையாக உருவாக்குவது சாத்தியம் இல்லை என்றே விஞ்ஞானிகள் கருதுகின்றார்கள்.

கவலை தரும் போக்கு:

கரோனா பெருந்தொற்றுக்குப்பின் பள்ளி மாணவர்களின் கற்றல் திறன், கவனம், உணர்ச்சிகளை அடக்கும் திறன் போன்றவை பெருமளவில் பாதிக்கப்பட்டதற்கு முக்கிய காரணம் திறன்பேசிகளின் அதீத பயன்பாடுகள்தான். Chat GPT பயன்படுத்தி மாணவர்கள் வீட்டுபாடம் எழுதுவதும் செயல் திட்டங்களை AI யிடம் பெற்று வகுப்பறையில் சமர்ப்பித்துவிடுவதும், Al தயாரித்த முனைவர் பட்ட ஆய்வுகளை தான் தயாரித்ததுபோல் சமர்ப்பிப்பதும் வந்துவிட்டது. இதனால் "Alpha" சந்ததி என்று அழைக்கப்படும் 21 ஆம் நூற்றாண்டு குழந்தைகள் வாசித்தல், எழுதுதல், கணக்கிடுதல் என்கின்ற அடிப்படைக்கல்வி கைவிடப்பட்டு கற்றலின் அடிப்படைகள் மறக்கப்படுகின்றன. மேலும், செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பத்தின் அதீத வளர்ச்சியால் ஏராளமானோருக்கு வேலைவாய்ப்பு இழப்பு ஏற்படும் என்பதே பலரின் கவலையாக இருக்கிறது.

அதனால் தான் உலக மத தலைவர்கள், திருதந்தை. பிரான்சிஸ் தலைமையில் வத்திகானில் ஒன்று கூடிய போது "செயற்கை நுண்ணறிவால் மனிதாபிமானத்தை பிரதிபலிக்க முடியாது என்றும் அதனால் இது அகதிகளின் உரிமைகளையும், பாதுகாப்பையும் கேள்விகுறியாக்கும்" என்றும் அறிக்கை வெளியிட்டுள்ளார்கள். மேலும் ஜீன் 14, 2024 அன்று தெற்கு இத்தாலியில் உள்ள போர்கோ எக்னாசியாவில் நடைபெற்ற 50-வது G7 உச்சி மாநாட்டில் திருத்தந்தை பிரான்சிஸ் செயற்கை நுண்ணறிவின் அபாயம் குறித்து உரையாற்றியபோது "கொடிய தன்னாட்சி ஆயுதங்களுக்கு" தடைவிதிக்க என்று அழைப்பு விடுத்தார். "எந்த இயந்திரமும் ஒரு மனிதனின் உயிரைப் பறிக்க தேர்வு செய்யக்கூடாது" என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

வரைமுறைப்படுத்துதல்:

ஆல்பிரெட் நோபல், "டைனமைட்" வெடி மருந்தை உலகிற்கு அறிமுகப்படுத்தியபோது அது மனித குலத்துக்கு பேராபத்தை விளைவிக்கப்போகிறது என்று அவர் அறிந்திருக்கவில்லை. ஆனால், செயற்கை நுண்ணறிவின் ஞானத் தந்தையான ஜெ.்.ரி ஹிண்டன் "திறன் பேசிகளின் (Smart Phone) ஆக்கப்பூர்வமான பயன்பாட்டுக்கும், முறைகேடான பயன்பாட்டுக்கும் இடையிலான இடைவெளி மிகவும் மெல்லியதாக இருப்பதால்தான் பள்ளிக்கூடம் முதல் படுக்கையறை வரை ஏற்பட்டு வரும் ஆபத்துகளைச் சமாளிக்க முடியாமல் திணறி வருகிறோம் இது செயற்கை நுண்ணறிவுக்கும் பொருந்தும" என்றார்.

செயற்கை நுண்ணறிவின் பயன்பாட்டை வரைமுறைப்படுத்தாவிட்டால் மனித குலமும் மனித மனங்களும் பேராபத்தை சந்திக்கும் என உறுதியாகச் சொல்லலாம். செயற்கை நுண்ணறிவு நிபுணர்கள், தொழில் நிறுவனங்கள், சமூக செயல்பாட்டாளர்கள், எழுத்தாளர்கள், மனநல நிபுணர்கள், கல்வியாளாளர்கள், ஆட்சியாளர்கள் என அனைவரும் இணைந்துதான் இந்தத் தொழில் நுட்ப பூனைக்கு மணிகட்ட வேண்டும்.

வாழ்த்துகளுடன்,

+ ஆயர் ஜீவானந்தம். A

Bishop's Programme – JULY 2025

Date	Day	Time	Programme
03	Thu	04:00 p.m.	Mass: St Thomas Mount, Chennai
05	Sat	3:00 p.m.	Fr. Stan Swamy's Statue Unveiling: Viragular
06 -	10	Sun to Thu	TNBC/TNLBC MEETING: Poondi
16	Wed	06.30 a.m.	Mass: Carmel Ashram, Kumbakonam
19	Sat	09.30 a.m.	Silver Jubilee Mass: SAT Agnes Provincilate, Kumbakonam
		03.00 p.m.	Meeting with the Correspondents and Priest - Headmasters & Directors of Hostels
20	Sun	06.30 p.m.	Grotto Blesssing & Confirmation: Pullambadi
21	Mon		Pastoral Visit: Pullambadi
Jul. 24 to Aug.11			Visit to Canada

MEETING WITH THE CORRESPONDENTS AND PRIEST- HEADMASTERS & DIRECTORS OF HOSTELS

Dear Rev. Fathers,

As discussed during the Annual Clergy Meeting, we have a Meeting with the Correspondents and Priest-Headmasters of the Higher Secondary schools, High Schools, Matriculation Schools, CBSC School, Poondi Pudumai Madha B.Ed. College, St.Peter's Art & Science College and directors of the Hostels.

The meeting will be held in the Bishop's House, Kumbakonam on July 19, 2025 (Saturday) afternoon by 3.00 pm.

The concerned priests would have received a personal invitation. May I kindly request all the above mentioned priests to attend the meeting without fail and give your valuable recommendation.

+Bp. A. Jeevanandam
Bishop of Kumbakonam.

BIRTHDAY

02.07.1982	Fr. J. Bastin Britto	Vadaveekam
03.07.1972	Fr. A. Suvakin	Perambalur
03.07.1973	Fr. A. Augustine Peter	Thiruvalathurai
11.07.1986	Fr. L. Rex Alex Silvester	Germany
11.07.1953	Fr. G. Michael	Kovandakurichy
12.07.1979	Fr. A. Eugin Tony	Kumbakonam
13.07.1971	Fr. E. Adaikalasamy	Uthani
14.07.1978	Fr. V.E. Shantha Kumar	Pallividai
15.07.1955	Fr. A. Francis	Thiruvaiyaru
15.07.1974	Fr. T. Dhivianathan	Pavanamangalam
15.07.1985	Fr. L. Selvakumar	Italy
16.07.1949	Fr. A. Packiasamy	No. 1 Tolgate
16.07.1980	Fr. S. Albert Xavier	Poondi
19.07.1979	Fr. A. Isaias	France
21.07.1956	Fr. A. Santhanam	Punalvasal
21.07.1983	Fr. E. Joseph Michael Raj	Thirumanthurai
26.07.1975	Fr. U. Rajendra Sekar	Purathakudi
27.07.1983	Fr. A. Mark Marceline	Irungalur
28.07.1968	Fr. A. Cyril Robert	USA
29.07.1970	Fr. S. John Kennedy	Thennur
30.07.1973	Fr. A. John Britto	Perumathur Eraiyur

NECROLOGY

07.07.1982	Rev. Fr. A. Lourdusamy	Ammanpet
10.07.2000	Rev. Fr. A. Stanislaus	Kumbakonam
10.07.2010	Rev. Fr. M. S. Mariadoss	Kumbakonam
13.07.1930	Rt. Rev. Msgr. M. A. Chapius	Kumbakonam
15.07.1993	Msgr. M. Antony David	Kumbakonam
19.07.1943	Rev. Fr. A. Xavier	Perumalpalayam
20.07.1953	Msgr. A. Gnanadickam	Michaelpatty
23.07.1990	Rev. Fr. K. Susaimanikam	Kumbakonam
31.07.1991	Rev. Fr. P. Gnaninathan	Kumbakonam

ORDINATION DAY

05.07.2010	Fr. A. Thomas Simonraj	Varatharajanpet
09.07.2020	Fr. A. Iruthayaraj	Kumbakonam
09.07.2020	Fr. V. William Edward	Kumbakonam
19.07.1976	Fr. A. Packiasamy	No.1 Tolgate
24.07.2008	Fr. W. Adaikalaraj	Gabrielpuram
24.07.2008	Fr. V. I. Adaikalasamy	Perambalur
24.07.2008	Fr. K. Arockiasamy	No.1 Tolgate
24.07.2008	Fr. D. Barnabas	Manathidal
24.07.2008	Fr. A. Eugin Tony	Kumbakonam
24.07.2008	Fr. I. C. Francis	Rome
24.07.2008	Fr. A. Isaias	France
24.07.2008	Fr. J. Maria Jomicks Savio	Achanur
24.07.2008	Fr. B. Robert	USA

THE ANNUAL MEETING OF THE KUMBAKONAM DIOCESAN CLERGY

The Annual Meeting of the Kumbakonam Diocesan Clergy was held on June 18-19, 2025 at the Poondi Madha Retreat cum Worship Centre. Around 125 priests participated in the program.

The Meeting began with a short prayer by Rev. Fr. V. William Edward followed by the welcome speech by the Vicar General. With a short introduction by the Procurator, the morning sessions up to lunch were spent in the presentation of the Annual Statement of Accounts for the year 2024-25 and the Diocesan Budget for the year 2025-26. The presentations were done by Mr. S. Francis, Auditor. Interventions and clarifications were made by the participants. The sessions were moderated by Rev. Fr. G. Cosmon Arockiaraj.

After lunch, proposals were welcomed to enhance the financial position of the diocese. Many gave their valuable recommendations. The Session was moderated by Rev. Fr. P. Thangasamy.

After the tea break in the evening, the clergy was addressed by a Jesuit team motivating the clergy about the importance of people's participation on the occasion of the Memorial Day for Fr. Stan Swamy (July 5) at Viragalur, his birth place. The priests were requested to motivate the Catholics in their parishes especially the parishes in the vicinity of Viragalur to make them participate in large number. The session was moderated by Rev. Fr. M. A. Soosaimanickam.

By 6.30 pm, the next session started to review the policy draft for the diocese of Kumbakonam. The Vicar General explained the need and process in the formation of the policy draft. The need of policies was felt by a majority of clergy during the first visit in the vicariates by the Bishop after his episcopal ordination. A drafting committee was constituted and it spent three days on two occasions

at Poondi discussing the draft and making suitable corrections. The corrected draft was further sent to the Vicars Forane for a discussion at the vicariate level. The draft was then discussed in the Senate and in the Diocesan Pastoral Council with the laity. Finally, after incorporating the recommendations given by all these above bodies, the revised draft was presented to the Clergy. The session was moderated by Rev. Fr. A. Martin De Porres.

On the following day the discussion on the policy draft started at 9.00 a.m. The sessions were both moderated and explained by the Vicar General. The discussions took place in different sessions. Finally the Bishop gave his observations and insisted on certain issues such as monthly subscription, transparency and accountability in the financial matters and importance of increasing the local resources to meet out our ordinary expenditure.

After the two-day program, the following important conclusions were drawn:

1. It was accepted as per the policy to increase the Mass Stipend to Rs.150/-. For Novena Masses, it can be Rs. 200/- (Stipend Rs.150/- and the rest can be used as TA for preachers invited on these days). This comes to effect from July 2025. The Priests are kindly requested to inform the people of their revised contribution for the Mass intentions. The priests are expected to remit to the Procurator the excess Mass stipends from the parishes and shrines at the rate of Rs.150/-. From July 2025, the Mass stipends distributed from the diocese for priests will be at the rate of Rs.150/-.
2. It was accepted to install at the vicariate centre a computer with Tally Program and every three months, the parishes and institutions in the vicariate will send their bills and vouchers to the vicariate where an office staff from the diocese/auditor office will be available to make the entries in the accounting software. Prior communications will be given to the parishes and institutions accordingly.


3. In the month of May every year, an auditing will be conducted with a team of auditors for the parishes and institutions.Thereby the audited statements will be prepared and issued to every parish and institution.
4. It was accepted to go for a Central Pooling System for the schools and institutions. All the revenues from the schools and institutions will be deposited in the Trust Accounts respectively. Based on the budget for every school and institution, the required amount will be credited in the account of the individual school and institution by every quarter.
5. The policies discussed in the above meeting will be published later.

I sincerely appreciate our priests who have really showed their greater interest in the improvement of our diocese through their interventions and recommendations. Let us work together for the good of our diocese and for the effective ministry among our people.

+ Bp. A. Jeevanandam,
Bishop of Kumbakonam.

திருத்தந்தையோடு மன்றாடுவோம்

ஜூலை : தெளிந்து தேர்ந்திடும் பயிற்சிக்காக ...



தெளிந்து தேர்வது எப்படி என்பதை மீண்டும் கற்றுக்கொள்ளவும், வாழ்வின் பாதைகளை எப்படி தேர்ந்தெடுப்பது என்பதை அறியவும், கிறிஸ்துவிடமிருந்தும் நற்செய்தியிலிருந்தும் நம்மை திசைமாற்றும் ஒவ்வொன்றையும் நிராகரிக்கவும் நாம் மன்றாடுவோம்.

"எல்லாருக்கும் மறைக்கல்வி" வழங்குதல் பற்றி தமிழக ஆயர் பேரவையின் மறைக்கல்விப் பணிக்குழுத் தலைவர் **மேதகு ஆயர் ஆல்பர்ட் அனஸ்தாஸ்** எழுதியுள்ள சுற்றறிக்கை

உயிர்த்த நம் ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவில் அன்பிற்கினியவர்களே! மறைக்கல்விப் பணிகளால் இறைமக்களின் நம்பிக்கை வாழ்வை ஒளிரச் செய்யும் உங்களுக்கு மனமார்ந்த வாழ்த்துகள்.

இயேசு ஒரு மாபெரும் மறைக்கல்வியாளர். அவரது வாழ்வும் பணிகளும் போதனைகளும் வல்ல செயல்களும் அவர் ஏற்ற பாடுகளும், இறப்பு, உயிர்ப்பு. விண்ணேற்றம் என அனைத்துமே மறைக்கல்வியின் பரிணாமங்கள். இயேசுவின் ஏக்கமும் நோக்கமும் வானகத் தந்தையின் எல்லையில்லா அன்பை இந்த மானிடம் உள்ளுணர வேண்டும் என்பதே. அந்த உயர்ந்த சிந்தனையை அவர் பல விதங்களில் பறைசாற்றினார். அதற்காக அவர் ஒரு கட்டமைப்பை உருவாக்கி தாம் சென்ற இடங்களையும் சந்தித்த மக்களையும் மறைக்கல்விக் களமாக்கினார்.

இயேசு, தாம் அறிமுகப்படுத்திய இறையாட்சியை இம்மண்ணில் மலரச்செய்ய மறைக்கல்வியை ஒரு கருவியாக ஆக்கினார். அவரது மறைக்கல்வியில் உவமைகள், உருவகங்கள், நாட்டு நடப்புகள், கேள்வி-பதில்கள், உரையாடல்கள், அறிவுறுத்தல்கள், பாராட்டுகள், எச்சரிக்கைகள் என எல்லாம் நிறைந்திருந்தன. தாம் எடுத்துச் சொல்ல விரும்பிய எல்லாவற்றையும் மிக எளிமையாகவும் எதார்த்தமாகவும், எல்லாரும் எளிதில் புரிந்துகொள்ளும் விதத்திலும் கையாண்டார்.

இயேசுவைப் பின்தொடர்ந்து பல மறைபணியாளர்கள் மறையை அறிவிக்கும் நோக்கில் தம் நாடு, வீடு, வசதி, கலாச்சாரம் என எல்லாவற்றையும் துறந்து நம் நாட்டிற்கு வந்து, தங்கள் உயிரைத்

துச்சமெனக் கருதி அர்ப்பணத்தோடு உழைத்த வரலாற்றை நாமறிவோம். அவர்கள் மறைபணி ஆற்றும் நோக்கில் பல பங்குத் தளங்களை உருவாக்கினார்; பள்ளிக்கூடங்களைக் கட்டியெழுப்பினர்; துறவு மடங்களை ஏற்படுத்தினர்; குருமடங்களைத் தொடங்கினர்; பற்பலத் தொண்டு நிறுவனங்களை நிறுவினர். எல்லாவற்றின் ஊடாகவும் நம்பிக்கை வளர் கல்வியான மறைக்கல்வியை வழங்கி கிறிஸ்துவின் மனநிலையில் மாணவச் செல்வங்களை உருவாக்கினர்.

மறைக்கல்வி என்பது ஒவ்வொரு மனிதனையும் இறைஇயேசுவின் மனநிலையில் உருவாக்கி இறைநம்பிக்கையில் முதிர்ச்சி அடையச் செய்து நற்செய்தி மதிப்பீடுகள் காட்டும் வாழ்க்கை முறையில் செயல்பட பயிற்றுவிக்கும் கல்வி. மறைக்கல்விதான் திருஅவைக்குள் பல்லாயிரக்கணக்கான புனிதர்களையும். மறைச்சாட்சியர்களையும் இலக்குத் தெளிவோடு இறையாட்சிப் பாதையில் பயணிக்கவும் பணியாற்றவும் உருவாக்கத்தைக் கொடுத்துள்ளது. மறைக்கல்விதான் இந்தியாவில், சிறப்பாகத் தமிழ்நாட்டில் இதுவரை ஆயிரமாயிரம் அருள்பணியாளர்களையும், துறவியரையும் அர்ப்பணமிக்கப் பொது நிலையினரையும் உருவாக்கி அவர்களை உலகின் உப்பாக ஒளியாக புளிக்காரமாக ஆன்மீகப் பணிகளையும் சமூகப் பணிகளையும் பொறுப்போடும் பொறுமையோடும் செய்திட தூண்டியுள்ளது.

தமிழக மறைக்கல்வியின் தந்தை என வருணிக்கப்படும் பாரிஸ் மறைபோதக அருள்தந்தை தாமஸ் சுவான் ட.்.பி (1888 1942) மறைக்கல்வியின் முக்கியத்துவத்தை "திருமுழுக்குப் பெற்று மறைபணி ஆற்றத் தேர்ந்துகொள்ளப்பட்ட நம் பணிகளில் மறைக்கல்வியே மத்தி மற்றப் பணிகளெல்லாம் அதைச் சுத்தி" என்று பாமரத் தமிழில் பாங்காய் பகர்ந்துள்ளார்.

இன்று தமிழகத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டப் பங்குகள், அவற்றைத் வழிநடத்த பங்கு அருள்பணியாளர்கள் ஒருபுறம். மழலையர். தொடக்க, நடுநிலை. உயர்நிலை, மேல்நிலை என பத்தாயிரத்திற்கு மேலான பள்ளிக்கூடங்கள், அவற்றை மேலாண்மை செய்யவும் நிர்வகிக்கவும் ஆயிரக்கணக்கான தாளாளர்கள், தலைமையாசிரியர்கள், துறவியர், பொதுநிலையினர் என மறுபுறம். இச்சூழலில் நம் பங்குகளிலும் பள்ளிகளிலும் மறைக்கல்விக்கு நாம் கொடுக்கும் முக்கியத்துவம் என்ன?

இந்தியத் திருஅவை தன்னகம் கொண்டுள்ள 136 மறைமாவட்டங்களுக்கும் மறைக்கல்விப் பணிக்கு முன்னோடியாகத் திகழ்வது எதுவெனில் 18 மறைமாவட்டங்களைக் கொண்டு இயங்கும் தமிழகத் திருஅவைதான் என்ற பெருமை நமக்கு உண்டு. ஆனால் தமிழ்நாட்டின் கத்தோலிக்கப் பங்குகளில் இன்னும் ஞாயிறு மறைக்கல்வி நடத்தப்படாத பங்குகள் பல நூறு உள்ளன என்பது அதிர்ச்சி தரும் தகவல். அருள்பணியாளர்கள், துறவியர் நிர்வகிக்கும் பள்ளிக்கூடங்களில் மறைக்கல்வி, நன்னெறி வகுப்புகள் நடத்தப்படாதது மிகவும் வேதனைத் தரும் செய்தி. நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளுக்கு மறைக்கல்வி வழங்காமலிருப்பது இறையாட்சி மதிப்பீடுகளுக்கும் கத்தோலிக்கத் திரு அவைக்கும் அதன் போதனைகளுக்கும் வழிகாட்டுதல்களுக்கும் நாம் திரு அவைக்கு அளித்த வாக்குறுதிகளுக்கும் முற்றிலும் முரணான செயலாக தோன்றவில்லையா? மறைக்கல்வி இன்றி நாளைய நலமான திருஅவையைக் கற்பனை செய்துகூட பார்க்க இயலாது. ஏனெனில், மறைக்கல்விதான் திருஅவையின் உயிர் மூச்சு.

நற்கருணை கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் உச்சமுமாக (திவ. எண் 10) இருப்பதுபோல, இறைவார்த்தை, இறைநம்பிக்கை வாழ்வின் உயிர்நாடியாக (இவெ. எண் 24) இருப்பதுபோல, மறைக்கல்வி இறைநம்பிக்கைப் பயணத்தின் உயிர்மூச்சு (நிக, எண் 4) என்பதை

உளமார உணர்ந்து களமிறங்கி செயல்பட வேண்டிய காலக்கட்டம் இது. மறைக்கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்காத பங்குகளும், பள்ளிகளும் அல்லது அவற்றை நிர்வகிப்போரும் மறைமுகமாக திருஅவையையும் அதன் தலைவராகிய கிறிஸ்துவையும் கண்டு கொள்ளாத அபாயகரமான செயலை மேற்கொள்கின்றனரோ என்று நினைக்கத் தோன்றுகின்றது.

திருத்தூதர் பவுல், தாங்கள் கேள்வியுறாத ஒருவர்மீது எவ்வாறு நம்பிக்கை கொள்வார்கள்? அறிவிக்கப்படாத ஒன்றுபற்றி அவர்கள் எவ்வாறு கேள்வியுறுவார்கள்? அனுப்பப்படாமல் அவர்கள் எவ்வாறு அறிவிப்பார்கள்? (உரோ 10:14-15) என எழுப்பும் பல கேள்விகளுக்கு நாம் கூறும் பதில்மொழி என்ன? மழலைப் பருவத்திலும் பதின் பருவத்திலும் வழங்காத மறைக்கல்வியையும் நன்னெறியையும் நம் பிள்ளைகளுக்கு எந்தப் பருவத்தில் வழங்கப் போகின்றோம்? ஏனெனில், மறைக்கல்வி. நன்னெறி ஏனைய பாடங்களைப் போன்றவை அன்று மாறாக நம்பிக்கையையும் நல்வாழ்வையும் அனுபவமாக்கும் வாழ்வியல் கலைகள். விரும்பினால் நடத்துவதற்கும். விரும்பாவிட்டால் கண்டு கொள்ளாமலிருப்பதற்குமான விருப்பப்பாடங்கள் அல்ல. இப்பணிப் பொறுப்பிலிருக்கும் ஒவ்வொருவர்மீதும் சுமத்தப்பட்டுள்ள கட்டாயக் கடமை. இதில் யாருக்கும் விதிவிலக்கு இருக்க தேவையில்லை.

மறைக்கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்தே 2-ஆம் வத்திக்கான் சங்கம் கத்தோலிக்கப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் "உலகியல் அறிவு, மறை அறிவு ஆகிய இரண்டிலும் தேர்ச்சி பெற்றிருப்பதோடு திருத்தூது உணர்விலும் ஊறித் திளைத்து, தங்கள் வாழ்வாலும் படிப்பினையாலும் ஒரே ஆசிரியரான கிறிஸ்துவுக்குச் சான்று பகர வேண்டும்" (கிறிஸ்துவக் கல்வி. எண். 8) என வலியுறுத்துகின்றது.

எனவே, இந்த கல்வி ஆண்டு முதல் தமிழகத்தின் எல்லாப் பங்குத் தளங்களிலும் பள்ளிக் கூடங்களிலும் அவற்றின்

பொறுப்பிலிருப்போர் ஞாயிறு மற்றும் பள்ளி மறைக்கல்வியையும் நம் பள்ளிகளில் பயிலும் பிற சபைகள். சமயங்கள், சார்ந்த மாணவர்களுக்கு நன்னெறிக் கல்வியையும் வழங்க வேண்டும் என தமிழக ஆயர் பேரவை சார்பாக அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். மறைக்கல்விக்கான பாடநூல்களை திண்டிவனம், முப்பணி மையமும் நன்னெறிக் கல்விக்கான நூல்களை திண்டுக்கல், வைகறைப் பதிப்பகமும் வெளியிட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள். உங்களுக்குத் தேவையான பாடநூல்களை உங்கள் மறைமாவட்ட மறைக்கல்விப் பணிக்குழுச் செயலர் / மேய்ப்புப்பணி நிலைய இயக்குநர் / பள்ளிகளின் கண்காணிப்பாளர் ஆகியோரை அணுகிப் பெற்றுக்கொள்ளலாம்.

தமிழகத் திரு அவையானது 2011-2012ஆம் ஆண்டுதனை 'மறைக்கல்வி ஆண்டாக' அறிவித்து எல்லாருக்கும் மறைக்கல்வி எனும் மையச் சிந்தனையோடு கொண்டாடியதை இந்நேரத்தில் நினைவுகூர்கிறேன். மறைக்கல்வி தொடர்பான நம் திட்டங்களும் பணிகளும் அந்த ஆண்டோடு முற்றுப்பெற்றுவிடவில்லை. அதன் ஒளியில் நாம் இன்னும் ஆழமாகத் திட்டமிட்டு பணிகள் தொடரக் கடமை கொண்டுள்ளோம். இத்தருணத்தில், ஒவ்வொரு மறைமாவட்டத்திலுமுள்ள பங்குகளில் நடைபெறும் ஞாயிறு மறைக்கல்வி மற்றும் பள்ளி மறைக்கல்வி பற்றிய தகவல்களைச் சேகரித்து தமிழக ஆயர் பேரவைக்கு அனுப்ப மறைமாவட்ட மறைக்கல்வி பணிக்குழுச் செயலர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று நிலவும் இந்தியச் சூழலில் மறைக்கல்வி, நன்னெறி தவிர்க்க இயலாத வாழ்வியல் பாடங்கள் என்பதைக் கருத்தில் கொண்டு மாணவச் செல்வங்களை உருவாக்கிட உங்கள் எல்லாரையும் மிக அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

+ மேதகு ஆல்பர்ட் G.A. அனஸ்தாஸ்
தலைவர், தமிழக ஆயர் பேரவையின்
மறைக்கல்வி பணிக்குழு)

FROM THE PROCURATOR'S OFFICE

Dear Rev. Fathers,

Greetings from Fr. J. Antony Joseph, Procurator!

The following is the list of Parishes, Institutions and Priests who have contributed their Slab and Contributions (June 2025):

Contribution from Poondi Pudumai Madha B Ed College	2,00,000
Community Hall Contribution - Kottapalayam Parish	50,000
Mass Intention	
Kaniyiruppu Parish	2000
Padalur Parish	5000
Perambalur Parish	32,500
Kovandakurichi Parish	50,000
Papanasam Parish	70,331
Poondi Madha Basilica, Poondi	10,00,000
Pension Contribution	
Pension Contribution by Fr. L. Benjamin for April - May 2025	16,000
Contribution from Poondi Madha Basilica, Poondi	10,00,000
Salary Contribution	
Fr. A. Arul Sebastian - for May 2025	47,540
Fr. D. Barnabas - from May 2024 - Feb 2025	7,00,000
Fr R. Jayaraj - from Nov 2024- May 2025	5,97,436
Slab Contribution	
Kaniyiurppu Parish	1000
S Pudur Parish	3000
Padalur Parish	5000
Kulamanickam Parish	10,000
Ammanpet Parish	30,000

Pudukkottai Parish	50,000
Perambalur Parish	91,000
Kulumur Parish	5000
Contribution from Schools	
St Antony's High School, Ayyampet	2,00,000

I extend my sincere thanks to everyone who have contributed in various ways to the diocese. I request those who have not given their slab for the financial year 2024-2025, to remit the same at the earliest.

Yours in Christ,
Fr. J. Antony Joseph,
Procurator.

It is a long-standing tradition in our diocese to offer three Masses for the repose of the soul of a priest who has passed away. As you may know, Rev. Fr. S.A. Chinnappan recently entered his eternal rest at the age of 83. I kindly request you to offer three Masses for the repose of his soul.

Fr. J. Antony Joseph,
Procurator.

NEWS FROM EDUCATION COMMITTEE, DIOCESE OF KUMBAKONAM

During the last Education Committee Meeting held on 21.03.2025, it was unanimously accepted by the members to fix a uniform remuneration to the Substitutes of those teachers taking medical leave. And it was approved by our Bishop. Accordingly, those teachers who are working in our diocesan (aided) schools, if they take leave, are to pay remuneration to the substitutes as fixed by the Kumbakonam Education Committee. Hereby, all the Correspondents / Headmasters / Headmistresses of our Diocesan Aided Schools are requested to follow this policy from this academic year 2025-2026 onwards.

For SG - Rs. 7,000/-
For B.T. - Rs. 10,000/-
For PG - Rs. 12,000/-

Rev. Fr. A. Victor Lawrence
Education Secretary
Diocese of Kumbakonam

வத்திக்கான் செய்தி

அகமதாபாத் விமான விபத்து குறித்த திருத்தந்தையின் இரங்கல் செய்தி

இந்தியாவின் அகமதாபாத் விமான நிலையம் அருகே ஜூன் 12, வியாழனன்று நடைபெற்ற விமான விபத்து குறித்து தன் ஆழ்ந்த கவலையையும், அனுதாபங்களையும் வெளியிட்டுள்ளார் திருத்தந்தை 14 ஆம் லியோ.

242 பேருடன் இலண்டன் நோக்கிக் கிளம்பிய ஏர் இந்தியா விமானம் விபத்துக்குள்ளாகியதில் 241 பேர் உயிரிழந்தனர். இந்த விபத்தில் பாதிக்கப்பட்டோர் மற்றும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருப்போருக்காகவும், உயிரிழந்துள்ள மக்களுக்காகவும் தன் செப உறுதியை எடுத்துரைத்துள்ள திருத்தந்தை 14ஆம் லியோ அவர்கள், உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கும் அவர்களின் நண்பர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதாகவும் தன் செய்தியில் கூறியுள்ளார்.

கடவுளை அறியாது இருப்பதே மிகக்கொடிய வறுமை

கடவுளை அறியாது இருப்பதே மிகக்கொடிய வறுமை என்றும் வலியுறுத்தியுள்ளார் திருத்தந்தை 14-ஆம் லியோ.

"நீரே என் நம்பிக்கை" என்ற திருப்பாடல் (தி.பா:71: 5) வரிகளை தலைப்பாகக் கொண்டு ஒன்பதாவது உலக வறியோர் நாளை முன்னிட்டு வெளியிட்டுள்ள செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ள திருத்தந்தை 14 -ஆம் லியோ அவர்கள், பொதுக்காலத்தின் 33-ஆம் ஞாயிறாகிய நவம்பர் 16 அன்று இந்நாள் சிறப்பிக்கப்பட இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

"ஏழைகள் அனுபவிக்கும் மிக மோசமான பாகுபாடு ஆன்மிக கவனிப்பின்மை. அவர்களுக்கு கடவுள், அவருடைய நட்புறவு, ஆசிர், இறைவார்த்தை, வழிபாட்டுக் கொண்டாட்டம், வளர்ச்சியடைந்த நம்பிக்கைப் பயணம் ஆகியவற்றை வழங்க நாம் தவறக்கூடாது" என்று நற்செய்தியின் மகிழ்ச்சி (*Evangelii gaudium*) என்னும் திருத்தூது மடலில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வலியுறுத்தியக் கருத்துக்களை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலக இன்பங்களும், பொருளாதார செழிப்பும், எவ்வளவு முக்கியமானதாக இருந்தாலும், நம் இதயங்களுக்கு மகிழ்ச்சியைக் கொண்டுவர முடியாது என்று வலியுறுத்தியுள்ள திருத்தந்தை அவர்கள், செல்வம் ஏமாற்றத்தினை அளிக்கிறது, வறுமையின் துயரமான சூழ்நிலைகளுக்கு வழிவகுக்கின்றது என்றும், எல்லாவற்றிற்கும் மேலாக, கடவுளுக்கான நமது தேவையை அங்கீகரிக்கத் தவறியதாலும், அவர் இல்லாமல் வாழ முயற்சிப்பதாலும் வறுமை பிறக்கின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

வற்றாத ஆதாரங்கள்

ஜூன் 25, புதன்கிழமை, இத்தாலியின் திரிவெனெத்தோ மறைமாவட்டங்களின் குருத்துவ பயிற்சி மாணவர்களை யூபிலி ஆண்டுக் கொண்டாட்டங்களையொட்டி, திருப்பீடத்தில் சந்தித்தபோது திருத்தந்தை பதினான்காம் லியோ "கடவுளின் வார்த்தையும், அருளடையாளங்களும் வற்றாத ஆதாரங்கள் என்றும், அவற்றிலிருந்து நமது ஆன்மிக வாழ்க்கைக்கும், மேய்ப்புப் பணிக்கும் எப்போதும் புதிய ஊட்டத்தைப் பெறமுடியும்" என்று கூறினார். மேலும், எல்லாவற்றிற்கும் மேலாக, இயேசுவின் மீது உங்கள் பார்வையைப் பதிய வைத்து, அவருடன் ஓர் ஆழமான நட்பை வளர்த்துக் கொள்ளுங்கள் என்று அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

இளைஞர் மற்றும் குடும்பநலப் பணிக்குழுக்கள்

01.06.2026 மறைமாவட்ட இளைஞர் இயக்க செயற்குழு கூட்டம் அலுவலகத்தில் நடைபெற்றது

10.06.2025 மறைமாவட்ட இளைஞர் பணி குழுவின் புதிய இயக்குநராக அருள்தந்தை. S. ஜான் கொர்னேலியுஸ் பொறுப்பு ஏற்றுக் கொண்டார்

20.06.2025 இளைஞர் பணிக்குழு அலுவலகத்தில் இயக்குநர் தந்தையுடன் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

ஜூலை மாதம் திருமணத் தயாரிப்புப் பயிற்சி நடைபெறும் இடங்கள்

வ.எண்.	தேதி	இடம்
1	ஜூலை 05 மற்றும் 06 சனி மற்றும் ஞாயிறு	குழந்தை இயேசு திருத்தலம் நம்பர்-1, டோல்கேட், திருச்சி
2.	ஜூலை 19 மற்றும் 20 சனி மற்றும் ஞாயிறு	அருளானந்தர் மறைப்பணி நிலையம், கும்பகோணம்

இவண்,

அருள்பணி S. ஜான் கொர்னேலியுஸ்,

செயலர், இளைஞர் மற்றும் குடும்பநலப் பணிக்குழுக்கள்.

மறைக்கல்வி, நற்செய்தி அறிவிப்பு மற்றும் பெஸ்கி கலைக்குழு பணிக்குழுக்கள்

மறைக்கல்வி

1) 06.06.2025 - 08.06.2025 அனைத்து பள்ளிகளுக்கும் மறைக்கல்வி- நன்னெறி புத்தகங்கள் விநியோகம் பற்றிய அறிவிப்பு கடிதம் அனுப்பும் பணி நடைபெற்றது.

2) 09.06.2025 - 17.06.2025 மறைக்கல்வி- நன்னெறி புத்தகங்கள் சிவகாசி, திண்டிவனத்தில் இருந்து வந்தன. அவற்றை வகுப்பு வாரியாக சரிபடுத்தும் பணி நடைபெற்றது.

3) 18.06.2025 மறைக்கல்வி பணிக்குழு ஆண்டு கூட்டம் திண்டிவனம் முப்பணி நடு நிலையத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நமது மறைமாவட்டம் சார்பாக வேதியர் A. சகாயராஜ் கலந்து கொண்டார், அந்த கூட்டத்தில் கடந்த ஆண்டில் நமது மறைமாவட்டத்தில் நடைப்பெற்ற பணிகள் பற்றியும் வருகின்ற ஆண்டில் செயல்படுத்த இருக்கும் பணிகள் பற்றியும் பகிரப்பட்டது.

4) 24.06.2025 - 30.06.2025 ஆகிய நாட்களில் மறைமாவட்டத்தின் அனைத்து பள்ளிகளுக்கும் மறைக்கல்வி - நன்னெறி புத்தகங்கள் நேரடியாக விநியோகம் செய்யும் பணி நடைபெற்றது.

பெஸ்கி

1) 07.06.2025 - சனிக்கிழமை அன்று காலை 10.00 மணி முதல் 1:30 மணி வரை கும்பகோணம், புனித அருளானந்தர் மறைப்பணி நிலையத்தில் கும்பகோணம் மறைமாவட்டத்தின் மேய்ப்புப்பணி பேரவை நிர்வாகக்

குழு கூடுகை நடைப்பெற்றது. இந்நிகழ்வானது பெஸ்கி கலைக்குழுவால் ஒலி, ஒளிப்பதிவு செய்யப்பட்டு பெஸ்கி வலையொளி தளத்தின் (YouTube) வழியாக ஒளிபரப்பப்பட்டது.

2) 08.06.2025 - அன்று பாளையம் பங்கு, புனித சூசையப்பர் ஆலயத்தில், அருள்பணி. A. ஜெயராஜ் அவர்கள் நிறைவேற்றிய திருப்பலியானது பெஸ்கி கலைக்குழுவால் ஒலி, ஒளிப்பதிவு செய்யப்பட்டு மாதா தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பப்பட உதவி செய்யப்பட்டது.

3) 25.06.2025 - அன்று குடந்தை தூய அலங்கார அன்னை பேராலயத்தில், அருட்பணி. A. யூஜின் டோனி தலைமையில் நடைபெற்ற திருப்பலி பெஸ்கி கலைக்குழுவால் ஒலி, ஒளிப்பதிவு செய்யப்பட்டு மாதா தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பப்பட உதவி செய்யப்பட்டது.

இவண்,

அருள்பணி A. இராஜமாணிக்கம்,

இயக்குநர், மறைப்பணி மையம்.

விவிலியம், அன்பியம் மற்றும் பொதுநிலையினர் பணிக்குழுக்கள்

07.06.2025 மறைமாவட்ட மேய்ப்புபணி பேரவையின் நிர்வாகக்குழுக் கூட்டத்தில் பணிக்குழுவின் புதிய செயலர் திரு. செ. பாப்பு வில்லியம் கலந்துகொண்டார். மறைமாவட்ட புதிய விதிமுறைகளின் முன் ஆய்வு மற்றும் பரிந்துரைத்தலுக்கான இக்கூட்டத்தில், பொதுநிலையினர் குறித்த கருத்துக்கள் பரிந்துரைக்கப்பட்டன.

10.06.2025 மறைமாவட்ட பொதுநிலையினர் பணிக்குழுவின், முதல் பொதுநிலைச் செயலராக ஆயரால் நியமிக்கப்பட்ட திரு. செ. பாப்பு வில்லியம் மறைமாவட்ட முதன்மை குரு மற்றும் மறைபணி நிலைய இயக்குநர் தந்தை முன்னிலையில் மற்ற அனைத்து பணிக்குழுக்களின் செயலர்களோடு இணைந்து தனது பணிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இப்பணியோடு கிறித்தவ வாழ்வுரிமை இயக்கத்தின் மறைமாவட்ட ஒருங்கிணைப்பாளராக செயல்படவும் பணிக்கப்பட்டார்.

14.06.2025 - 15.06.2025 - தமிழ்நாடு பொதுநிலையினர் உருவாக்க மையம், பிராட்டியூர், திருச்சியில் தமிழக பொதுநிலையினருக்கான Empowering the Laity to be Witness என்ற மைய சிந்தனையில் ஒருநாள் கருத்தமர்வு இந்திய ஆயர் பேரவையின் (CCBI) பொதுநிலையினர் பணிக்குழுவின் தேசிய தலைவர் மேதகு ஆயர் யூஜின் ஜோசப் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. தமிழக பொதுநிலையினர் பணிக்குழுவின் தலைவர் மேதகு ஆயர் அந்தோணி பாப்புசாமி அவர்கள் தொடக்கவுரை வழங்கினார். பணிக்குழுவின் தேசிய செயலர் அருள்பணி அந்தோணி பெர்னான்டஸ் மற்றும் பணிக்குழுவின் தேசிய கவுன்சில் உறுப்பினர் அருள்பணி சலீன் ஆகியோர் கருத்துரைகள் வழங்கினர். தமிழக செயலர் அருள்பணி மரிய மிக்கேல் அவர்கள் நிகழ்வுகளை ஒருங்கிணைத்தார். 70 பேர் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் நமது மறைமாவட்டத்திலிருந்து 4 பேர் கலந்து கொண்டனர்.

இரண்டாம் நாள் (15.06.2025) தமிழக பொதுநிலையினர் பணிக்குழுவின் பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. நமது மறைமாவட்ட பணிக்குழுவின் புதிய செயலர் சிறப்பான முறையில் கௌரவிக்கப்பட்டார். கூட்டத்தில் 2025-2026 ஆண்டுக்கான செயல்திட்டங்கள் விவாதிக்கப்பட்டு இறுதி செய்யப்பட்டது.

17.06.2025 பணிக்குழு செயலர் பணிக்குழுவின் செயல்பாடு குறித்து மறைமாவட்ட ஆயர், முதன்மைதந்தை, மேய்ப்புபணி நிலைய இயக்குநர் இவர்களோடு தனித்தனியே ஆலோசனை நடத்தினார். பணிக்குழுவின் ஆண்டுத்திட்டம் தயாரித்து அளிக்கும்படி செயலர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

19.06.2025 தமிழக பொதுநிலையினர் உருவாக்க மையம், பிராட்டியூர், திருச்சியில் கிறித்தவ வாழ்வுரிமை இயக்க (தமிழ்நாடு-புதுவை) செயல்பாட்டுக் கலந்துரையாடல் கூட்டம் மேதகு ஆயர் நீதிநாதன், நெறியாளர், தலைமையில் நடைபெற்றது. அருள்பணி ஜேம்ஸ் விக்டர், அமைப்பாளர் முன்னின்று நடத்தினார். நமது மறைமாவட்ட கிறித்தவ வாழ்வுரிமை இயக்க ஒருங்கிணைப்பாளரும் பொதுநிலையினர் பணிக்குழுவின் செயலருமான திரு. செ. பாப்பு வில்லியம் கலந்துக்கொண்டு இயக்க நடைமுறைகள், திட்டங்கள் குறித்து அறிந்துகொண்டார்.

இவண்,

திரு செ. பாப்பு வில்லியம்,
செயலர், அன்பியம், விவிலியம் மற்றும்
பொதுநிலையினர் பணிக்குழுக்கள்.

பெண்கள் பணிக்குழு

07.06.2025 திருச்சி, பிராட்டியூரில் மறைமாவட்ட பெண்கள் பணிக்குழுவின் செயலர்களுக்கான பொதுக்குழுக்கூட்டம் மேனாள் மேதகு பேராயர் அந்தோணி பாப்புசாமி DD., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பணிக்குழுவின் ஆறு மாத பணி அறிக்கை வாசித்து சமர்பிக்கப்பட்டது. இதில் பணிக்குழுவின் செயலர் அருள்சகோதரி ஸ்கொலாஸ்டிகா மற்றும் திருமதி. கிறிஸ்டி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

10.06.2025 புனித அருளானந்தர் மறைப்பணி மையத்தில் மறைமாவட்ட முதன்மைகுரு பேரருட்திரு. M.பிலோமின்தாஸ், மறைவட்ட முதன்மை குரு பேரருட்திரு. G.கோஸ்மான் ஆகியோரின் முன்னிலையில், மேய்ப்புப்பணி நிலைய இயக்குநர் அருள்பணி. A.இராஜமாணிக்கம் அவர்கள் தலைமையில் அருள்சகோதரி. ஸ்கொலாஸ்டிகா பெண்கள் பணிக்குழு செயலராக பணியை ஏற்றுக்கொண்டார்.

20.06.2025 பணிக்குழு செயலர் தலைமையில் நிர்வாகக்குழு கூட்டம் நடைபெற்றது. செப்டம்பர் 29, 30, அக்டோபர் 1 ஆகிய 3 நாட்கள் 7-வது தேசிய பெண்கள் பணிக்குழுவின் மாநாடு நடைபெற்றது. இதில் ஸ்டேன் சுவாமி சிலை திறப்பு, பெண்கள் பங்கேற்பு, கருத்தாளர் பயிற்சி பற்றிய கருத்துக்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டன. 20 பேர் இதில் பங்கேற்று பயனடைந்தனர்.

21.06.2025 பூண்டி தியான இல்லத்தில் புள்ளம்பாடி மறைவட்ட முதன்மை தந்தை பேரருட்திரு M.A. சூசைமாணிக்கம் அவர்கள் தலைமையில் ஸ்டேன் சுவாமி அவர்களின் திரு உருவ சிலை திறப்பு விழா திட்டமிடல் கூட்டம்

நடைபெற்றது. இதில் பெண்கள் பணிக்குழு சார்பாக வேதியர் திருமதி. மரிய புஷ்பம் கலந்துக்கொண்டார்.

21.06.2025 சென்னையில் குவனேலியன் சபைகள் இணைந்து கொண்டாடிய 2025 யூபிலி கொண்டாட்ட நிகழ்வு சென்னையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் குவனெல்லா நகர் பங்கின் வெரோனிக்கா பெண்கள் குழு பங்கேற்று கலைநிகழ்வு வழங்கினார்கள்.

22.06.2025 – குவனெல்லா நகர் பங்கில் பெண்கள் இயக்க கூட்டம் நடைபெற்றது. இதில், பணிக்குழு செயலர் அவர்கள் பங்கேற்று கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்கள்.

இவண்,

அருள்சகோதரி. ஸ்கொலாஸ்டிகா, DMI

செயலர், பெண்கள் பணிக்குழு.

அருங்கொடை பணிக்குழு

03.06.2025 அன்று கும்பகோணம், நால்ரோடு, புனித அந்தோணியார் ஆலயத்தில் காலை 11.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை நற்செய்தி கூட்டம் நடைபெற்றது. இதில் 300–க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இறையாசீர் பெற்றனர்.

05.06.2025 அன்று கும்பகோணம், கார்மேல் கன்னியர் இல்ல அருள்சகோதரிகளுக்கும், இறைமக்களுக்கும் மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை நற்செய்தி கூட்டம் நடைபெற்றது.

06.06.2025 அன்று கும்பகோணம், தூய இருதய மருத்துவமனையில் மாலை 6.00 மணி முதல் 9.00 மணி வரை பயிற்சி பெறும் மாணவியர்கள் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கு நற்செய்தி கூட்டம் நடைபெற்றது.

07.06.2025 அன்று கண்டியாங்குப்பம், புனித சலேத் அன்னை திருத்தலத்தில் காலை 10.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை நற்செய்தி கூட்டம் நடைபெற்றது. இதில் 300-க்கும் மேற்பட்டோர் கலந்துக்கொண்டு இறையாசீர் பெற்றனர்.

07.06.2025 அன்று மாலை 6.30 மணி முதல் இரவு 11.30 மணி வரை நமது பூண்டி மாதா திருத்தலத்தில் சிறப்பு செபவழிபாடு நடைபெற்றது. இதில் 400-க்கும் மேற்பட்டோர் கலந்துக்கொண்டு இறையாசீர் பெற்றனர்.

08.06.2025 அன்று நமது கும்பகோணம் புனித அருளானந்தர் மறைப்பணி நிலையத்தில் காலை காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நற்செய்தி கூட்டம் நடைபெற்றது. இதில் 200-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இறையாசீர் பெற்றனர்.

10.06.2025 அன்று கும்பகோணம், புனித வளனார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆசிரிய பெருமக்களுக்கு ஒருநாள் தியானம் நடத்தப்பட்டது.

13.06.2025 அன்று கும்பகோணம், இதயா கல்லூரி பேராசிரியர்களுக்கு ஒருநாள் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

14.06.2025 அன்று ஏலாக்குறிச்சி, புனித அடைக்கல அன்னை திருத்தலத்தில் ஒருநாள் நற்செய்தி கூட்டம் நடைபெற்றது. இதில் 300-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இறையாசீர் பெற்றனர்.

23.06.2025 அன்று குலமாணிக்கம் பங்கு, செம்பியங்குடியில் மாலை காலை 06.00 மணி முதல் இரவு 08.30 மணி வரை நற்செய்தி கூட்டம் நடைபெற்றது. இதில் 500-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இறையாசீர் பெற்றனர்.

29.06.2025 அன்று புனல்வாசல் பங்கில் காலை காலை 09.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நற்செய்தி

கூட்டம் நடைபெற்றது. இதில் 400-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இறையாசீர் பெற்றனர்.

இவண்,
அருள்பணி. A. யூஜின் டோனி,
செயலர், அருங்கொடை பணிக்குழு.

பட்டியலினத்தார் / பழங்குடியினர் பணிக்குழு

16.05.2025 18.05.2025 - ஜெயங்கொண்டம் மறைவட்டத்தில் உள்ள தலித் கிறிஸ்தவ கிராமங்களைச் சேர்ந்த மக்களை சந்தித்து, மறைமாவட்ட நிர்வாகப் பள்ளியில் படிக்கும் தலித் கிறிஸ்தவ மாணவர்களுக்கு வழங்கப்படும் 25% கல்வி கட்டண சலுகை கடிதம் நேரடியாக கொடுக்கப்பட்டது.

20.05.2025 21.05.2025 ஜெயங்கொண்டம் மறைவட்டத்தில் உள்ள தலித் கிறிஸ்தவ கிராம மக்களை சந்தித்து, ஆகஸ்ட் 10 கருப்பு தினம் குறித்து விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

05.06. 2025 திருச்சி, தஞ்சை, கும்பகோணம் உள்ளடங்கிய பட்டியலினத்தார் மற்றும் பழங்குடியினர் பணிக்குழுக்களுக்கான ஆண்டு திட்டமிடல் கூட்டம் தஞ்சை, மேய்ப்புப்பணி நிலையத்தில் நடைபெற்றது. இதில் கும்பகோணம் மறைமாவட்ட பட்டியலினத்தார் மற்றும் பழங்குடியினர் பணிக்குழுக்களின் செயலர் அருள்பணி A. இருதயராஜ் அவர்கள் கலந்துக்கொண்டார்.

இவண்,
அருள்பணி. A. இருதயராஜ்,
செயலர், பட்டியலினத்தார் / பழங்குடியினர் பணிக்குழு.

கல்வி உதவித்தொகை நன்கொடை விவரம் ஜூன் - 2025

நெ.	விபரம்	தொகை
1.	அருள்பணி. A. மரிய சூசை, நூத்தப்பூர்	3000
2.	அருள்பணி. ஆல்பர்ட், OCD., வலங்கைமான்	10,000
3.	அருள்பணி. S. மரியதாஸ், கொணலை	5000
4.	அருள்பணி. G. கோஸ்மான் ஆரோக்கியராஜ், கும்பகோணம்	5000
5.	அருள்பணி. A. விக்டர் பால்ராஜ், கீழமிக்கேல்பட்டி	5000
6.	அருள்பணி. S. ஜோசப் கென்னடி, ஜெயங்கொண்டம்	10,650
7.	ஜெயங்கொண்டம் இறைமக்கள்	25,450
8.	வெள்ளனூர்	3000
9.	புனித ஆன்ட்ரூ பள்ளி, திருமாந்துறை	15,000
10.	புனித சம்மனசுகள் இல்லம், கும்பகோணம்	10,000
11.	தொன் போஸ்கோ, வரதராஜன்பேட்டை	10,000
12.	புனித அந்தோணியார் திருத்தலம், நால்ரோடு, கும்பகோணம்	5000
13.	அருள்பணி. J. மைக்கேல்ராஜ், கோட்டப்பாளையம்	20,000
14.	அருள்பணி. சவரிநாதன், செட்டியாப்பட்டி, தஞ்சாவூர்	10,000
	மொத்தம்	**1,37,100**





Pastoral Visit : Samayapuram

KUMBAKONAM DIOCESE NEWS LETTER



Confirmation : Samayapuram





Confirmation : Kumbakonam



Confirmation : Jayankondam

Bishop's House, Post Box No. 3, Kumbakonam - 612 001.
E-mail: kumbakonamdiocese@gmail.com
Webpage : www.dioceseofkumbakonam.org.